
# இரட்சிப்பு மார்ச் 2026 யுனிகோடு

## இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU IS SALVATION

Volume-15 March - 2026 Issue-10

Price Rs.5-00 Annual Subscription Rs.60/-




**Lenten Season 2026**

தபசு காலம்
தவக் காலம்

லெந்து காலம்
அருள் காலம்

## மனந்திரும்புவதற்கான காலம்

| LENTEN FRIDAYS | LENTEN SUNDAYS | HOLY WEEK |
|---|---|---|
| 3rd Friday 06/03/26 | 2nd Sunday 01/03/26 | Palm Sunday 29/03/26 |
| 4th Friday 13/03/26 | 3rd Sunday 08/03/26 | Holy Monday 30/03/26 |
| 5th Friday 20/03/26 | 4th Sunday 15/03/26 | Holy Tue.day 31/03/26 |
| 6th Friday 27/03/26 | 5th Sunday 22/03/26 | Spy Wed.day 01/04/26 |
| | | Maundy Th.day 02/04/26 |
| | | Good Friday 03/04/26 |
| | | Black Sat.day 04/04/26 |

நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் - யோபு

## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் மூன்றாம் மாதத்தைக் காண கிருபைசெய்த நம் தூயாதி தூயவருக்கு துதிகளை ஏறெடுப்போம். இம்மாதம் 19ம் தேதி தூய. யோசேப்பு-வின் திருநாள் (FEAST DAY OF ST. JOSEPH, FATHER OF LORD JESUS CHRIST), 25ம் தேதி மங்கள வாக்குத் திருநாள் (THE ANNUCIATION OF THE LORD) ஆகிய திருநாட்களை ஆசரிக்கிறோம். மட்டுமல்ல, இம்மாதம் முழுவதும் தபசு காலத்தின் வெள்ளிக்கிழமை சிறப்பு நண்பகல்-மாலை தியான ஆராதனைகள், தபசு காலத்தின் ஞாயிறு சிறப்பு ஆராதனைகள், உபவாச ஜெபங்கள், திருமறைத் தியானங்கள் ஆகியவை உண்டு. அனைத்து நிகழ்ச்சிகளிலும் பயபக்தியுடன் பங்கு பெற்று, லெந்து காலத்தில் உபவாசம்-ஜெபம்-ஈகை போன்றவற்றை கடைபிடித்து தேவாசீர்வாதம் பெற உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

'ஜெப-ஜன்னல்' 'வேதாகம-போட்டிகள்' 'அனைவரும்-ஊழியத்தில்' ஆகிய நமது ஊழிய திட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள். தகவல்-தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் மற்றும் நமது வலைதளத்தில் (www.ratchippu.com) தரப்பட்டுள்ளன.. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு மார்ச் 2026

வேத-வரிகள்-181

# தமிழ் இணைத் திருமறை

யோபு-42:4,5

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

இப்போதும் நீர் செவிகொடும்; நான் பேசுவேன். உம்மைக்கேட்பேன்; நீரென்னைப் போதியும். என் செவி யினால் உம்முடைய சொற்கேட்டேன்; இப்போது என் கண்ணும் உம்மைப் பார்க்கிறது.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

நீர் எனக்குச் செவிகொடும்; அப்பொழுது நான் பேசு வேன். நான் உம்மைக் கேள்வி கேட்பேன்; நீர் எனக்கு உத்தரவு சொல்லும். என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.

**திருவிவிலியம் (பொது-1995)**

அருள்கூர்ந்துக் கேளும்; அடியேன் பேசுவேன். வினவுவேன் உம்மை; விளங்கவைப்பீர் எனக்கு. உம்மைப் பற்றிக் காதால் மட்டுமே கேள்விப்பட் டேன்; ஆனால், இப்பொழுது, என் கண்களே உம்மைக் காண்கின்றன.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

யோபுவே, கவனி; நான் உன்னோடு பேசுவேன். நான் உன்னிடம் கேள்விகளைக் கேட்பேன்; நீ எனக்குப் பதில் கூறுவாய் என்றீர்; நான் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன்; இப்போது என் சொந்தக் கண்ணாலேயே உம்மைப் பார்க்கிறேன்.

# ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - மார்ச் 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், இஸ்ரேல்-ஈரான் போர்கள் நிறுத்தப்பட... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... இயற்கை பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்போரின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சம் இன்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக மரபுகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து, அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காக பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்கள் இன - மத - மொழி பேதமின்றி ஒற்றுமையோடு நல்வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள், வியாபாரம் செழிக்க... புயல், மழை, வெள்ள சேதங்களில் பாதுகாப்பு கிடைக்க... மத-வாத, பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி.சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5) திருமதி.ஷேரன் ஹெப்சிபா, திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி.ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை பயிலும் நம் பிள்ளைகளின் ஆண்டிறுதி பொதுத் தேர்வு களுக்காக... சிவா, கிளாட்சன், ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம், ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் நல்ல மார்க்குகள் கிடைக்க...

7) பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகளின் பொதுத் தேர்வு-செமஸ்டர் தேர்வுகளுக்காக... பார்வதி, பிரேம், ஷிஃபியா, ஷெரின் டேவிட், ஜாஸ்மின், சிப்ரா, ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம், நல்ல கிரேடு-மார்க்குகள் கிடைக்க...

8) திருமதி. ஷேரன் ஹெப்ஸிபா அவர்களின் சுக பிரசவத்துக்காக...

9) சகோ.சவேரியம்மாள், திருமதி.ஈவ்லின் USA, திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.லீலா டேவிட், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

10) திருமதி.ராஜேஷ்வரி, திருமதி.சுந்தரிபாய், திரு.ஜெபனேசர், திருமதி.ஜரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி.ஞானம் ராஜசேகர், Dr.ஷீபா, திருமதி.ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி.வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

11) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி.சாரா பாலசிங், திருமதி. ஜெயம் மேரி நெல்சன், திரு.சார்லஸ் சாலோமோன், திருமதி.V.மல்லிகா, திருமதி.லீலா ஜோஸப், திருமதி. ஞானசுந்தரி நாகராஜன், திருமதி.ஜரீன் வாக்கர் (கிரேஸ் திவ்யா), திருமதி.ராணி சாமுவேல்ராஜ், திரு.J.R. டேவிட், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு. S.J.P.ராஜா, திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.வனஜாஹெர்பர்ட் ஆகியோரின் குடும்பங்களுக்காக.

தபசு காலம்: சிறப்பு தேவசெய்தி...

# மனந்திரும்புதல் என்பது மீண்டும் வாழத் தொடங்குதல்

## REPENTENCE IMPLIES BEGINNING TO LIVE AGAIN



Rev. S.J.D. Dharmaraja

இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்புடன் உங்களை வாழ்த்துகிறேன். யோபுவின் புத்தகத்தைப் பலமுறை படித்திருக்கிறோம். யோபு தன் வாழ்வில் போராடுவதையும், தனது நண்பர்களுடன் வாக்குவாதம் செய்வதையும், இறுதியாக அவர் கடவுளை நேருக்குநேர் சந்தித்து மனந்திரும்புவதை நாம் இதில் வாசிக்கிறோம். கடவுளுடனான ஒரு சந்திப்பிற்குப் பிறகு, கடவுள் அவரது செல்வத்தை இரட்டிப்பாக மீட்டுக்கொடுக்கிறார். மேலும் 7 மகன்கள் மற்றும் 3 மகள்கள் கொண்ட மற்றொரு சரியான குடும்பத்தையும் அவருக்குக் கொடுக்கிறார். ஆறுதல் தேறுதலோடு யோபு, இன்னும் 140 ஆண்டுகள் வாழ்கிறார்.

யோபு மீண்டும் பல குழந்தைகளைப் பெற்றிருப்பது நல்லது, எனினும், யோபுவின் மனந்திரும்பு தல் இங்கு முக்கியமானது. அவருடைய மனந்திரும்புதல் என்பது அவர் வாழத் தொடங்கிய புதிய வாழ்வு என்ற புரிதலுடன் இம்மாதத்தின் தபசுகால தியானத்துக்கு அழைக்கப்படுகிறோம்.

**இழந்த உறவுகளுக்காக ஈடுசெய்ய முடியாது:**

யோபு, தன் 10பிள்ளைகளை பறிகொடுத்த 'புயல் நினைவு நாளை' சோகத்துடன் நினைவுகூர்ந்திருப்பார் என்பது திண்ணம். யோபு தன் வாழ்நாள் முழுவதும் தனது குழந்தை களின் மரணத்திற்காக துக்கம் அனுசரித்தார் என்று இறையியல் அறிஞர்கள் கூறுகின்றனர். நாம் இழந்துபோகும் நம் குடும்பத்துக்காக எவரும், ஒருபோதும், எந்த ஈடும் செய்ய முடியாது என்பதை யோபுவின் இந்த துக்கம் காட்டுகிறது. இந்த வாழ்க்கையில் நம் அனைவருக்கும், துக்கம் ஒரு நிலையானது. நாம் ஒரு குழந்தையை இழந்திருந்தாலோ, வாழ்க்கைத் துணையை இழந்திருந்தாலோ அல்லது பெற்றோரை இழந்திருந்தாலோ மாத்திரமே யோபுவின் துக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும். வாழ்வின் அதிக்கப்படியான துக்கத்திற்கான குரலை யோபு பின்வரு மாறு கொடுக்கிறார். "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான். ஒரு பூவைப் போல பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப் போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்." (யோபு.14:1,2)

ஆயினும், துக்கம் என்பது ஒரு கதையின் முடிவு அல்ல. துக்கத்துக்கு ஒரு பயனுள்ள நோக்கம் உண்டு. அது என்னவெனில், துக்கம் என்பது நாம் இழந்தவர்களிடம் நம் இதயங்கள் 'தொடர்ந்து நான் உன்னை நேசிக்கிறேன்' என்று சொல்ல உதவுகின்றன. துக்கம் என்பது நம்பிக்கைக்கு நம் இதயத்தைத் திறக்கும் கதவு. எனவே நாம், நம் அன்புக்குரியவர்களை நினைவில் கொள்ளும் போது நித்திய ஜீவனின் நம்பிக்கையையும் உறுதியாகப் பற்றிக் கொள்கிறோம்.

**இழப்புக்குப் பிறகு, வாழ்க்கை மீண்டும் தொடங்குகிறது:**

ஒருவரை இழந்த பிறகு வாழ்க்கை ஒருபோதும் ஒரே மாதிரியாக இருக்காது என்றாலும், அது மீண்டும் தொடங்குகிறது. யோபு, இறுதியில் பெற்ற 10 குழந்தைகள் அவர் இழந்த குழந்தை களுக்கு ஈடு செய்யாது. இருப்பினும், அவர்கள், யோபு தன் புதிய வாழ்வை மீண்டும் தொடங்குவதற்கான ஒரு ஆசீர்வாதமாக அமைந்தனர். பேராசிரியர் கேத்தரின் ஷிஃபர்டெக்கர் கூறும்போது, "யோபுவின் இழப்புகள் மத்தியில் அவர் மீண்டும் வாழத் தேர்வு செய்கிறார். அவர் அதிக குழந்தைகளைப் பெற்று அவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாய் வாழும் தியாகத்தை மனமுவந்து எடுத்துக்கொள்கிறார்." என்கிறார்.

நாம் இழப்பை அனுபவிக்கும்போது, மரண குழிக்குள் ஊர்ந்து இறக்குவதைத் தேர்வு செய்ய லாம்; அல்லது முன்னேறிச் சென்று ஒரு நல்ல வாழ்க்கையை உருவாக்க, மற்றவர்களுக்கு இரக்கம் காட்டத் தேர்வு செய்யலாம். யோபு, இங்கே, மீண்டும் தொடங்கும் புதிய வாழ்வை எடுத்துக் கொண்டார், மேலும் அவர் இரக்கத்தையும் காட்டினார். யோபு 42:8ல், தன்னை சபித்து நெருக்குதல் செய்த மனிதர்களுக்காக ஜெபித்து பலிகளைச் செலுத்துகிறார். தன்னை அவமானப் படுத்த முயன்றவர்களிடமும் யோபு இரக்கம் காட்டுகிறார்.

யோபு தனது நண்பர்களுக்காக ஜெபித்ததற்காகவே கடவுள் அவரை மீட்டெடுத்தார் என்பது சுவாரஸ்யமாக உள்ளது. நண்பர்களுக்காக அவர் செய்த பரிந்துரைக்காக மாத்திரமே கடவுள் யோபுவை மீட்டெடுக்கவில்லை. மாறாக, கடவுளின் மாறாத இரக்கம் மாத்திரமே யோபுவின் மீட்சிக்கான சான்றாகும்.

**இழப்பு நமது மனோபாவத்தை மாற்றுருவாக்குகிறது:**

யோபு ஒரு புதிய குடும்பத்தைத் தொடங்கியபோது அவருக்கு மீண்டும் 7 மகன்களும் 3 மகள் களும் இருந்தனர். இருப்பினும், சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்தப் பகுதியில் 7 மகன்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை, ஆனால் அது 3 மகள்களின் பெயர்களைக் கொடுக் கிறது. பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் மாத்திரமே பெண்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் எனினும், அவர்கள் பெயர்கள் குறிப்பிடப்படுவது அரிது. எனவே, இங்கு யோபு வின் மகள்களின் பெயர்களைக் கொடுப்பது அசாதாரணமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது. யோபு தனது மகள்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தினார் என்பதை இந்தப் பெயர்கள் காட்டுகின்றன.

யோபு தனது பின்வாழ்வில், தனது 3 மகள்களுக்கும் பரம்பரைச் சொத்தை வழங்கினார் என்பது சிறப்பான ஒன்று. மகள்களுக்கு பரம்பரைச் சொத்தை வழங்குவது யோபுவின் காலத்தில் (முற்பிதாக்கள் காலத்தில்) இல்லாத ஒன்றாகும். **அவர் தன் முன்வாழ்வின் 3 மகள்களுக்கு பரம்பரைச் சொத்தைத்; தரவில்லை**). எனவே, அவரைச்சூழ்ந்து வாழ்ந்த மக்களை மாத்திரமின்றி நம்மையும் இது ஆச்சரியப்படுத்துகிறது. யோபு, தன் சமகால சமூக விதிகளை மீறியே இதைச் செய்கிறார். அவரது மகள்களுக்கு இது ஒரு சிறப்பு ஆசீர்வாதம் ஆகும்.

கடவுளுடனான யோபுவின் சந்திப்பு, அவரது குழந்தைகள் அனைவரும் சமமானவர்கள் என்ற அவரது மாற்றுருவாக்கத்துக்கு வழிவகுத்தது,

கடவுளுடன் நெருங்கிய தொடர்புகொண்ட எவரையும் ஒரு இழப்பு என்பது மாற்றுறுவாக்குகிறது என்பது திண்ணம். உங்கள் குடும்பம், உங்கள் நண்பர்கள் மற்றும் வாழ்வைக்கூட உங்கள் இழப்புகள் மதிப்புமிக்கதாக மாற்றுருவாக்கும்.

**மனந்திரும்புதல் என்பது மீண்டும் வாழத்தொடங்குவது:**

யோபு கடவுளிடம், "இப்போது, என் கண்களால் உம்மை காண்கிறேன்; ஆகையால், நான் என்னை வெறுக்கிறேன், மனந்திரும்புகிறேன்" என்று கூறினார். முன்னதாக, யோபு கடவுளை அநீதியானவர் என்று குற்றம் சாட்டினார். ஆனால், அவர் கடவுளைச் சந்தித்தபிறகு, "நீர் தேவன், நீர் சர்வவல்லவர், அது எனக்குப் போதும்; நான் கரைந்து மனந்திரும்புகிறேன்." என்கிறார் கடவுளின் முன்னிலையில் கரைவது என்பது ஒரு கம்பளிப்பூச்சி பட்டாம்பூச்சியாக மாறுவதைப் போன்றது. அது சாதாரண மாற்றமல்ல; மாறாக, கம்பளிப்பூச்சியின் உடல் கரைந்து முதலில் ஒரு திரவ 'சூப்' ஆக மாறுகிறது. இந்த சூப்பில் இருந்து ஒரு பட்டாம்பூச்சி வடிவம் பெறுகிறது. யோபுவின் வாழ்வுpலும் இதுதான் நடந்தது. அவர் தன் மனந்திரும்புதல் மூலமாக கரைந்து போனார். மட்டுமல்ல, கடவுளுக்குள் புதுப்பிக்கப்பட்ட வாழ்வில் பட்டாம்பூச்சியாக மாறினார்.

அன்பானவர்களே! நாமும், நம் வாழ்வில் இழப்புகளைச் சந்திக்கும்போது, கடவுளுடனான சந்திப்பின் மூலம் கரைந்து புதியவர்களாக மாற்றுருவாகி. அதன்மூலம் ஆபத்துக்களை துணிவுடன் எதிர்கொண்டு புதுவாழ்வு வாழக் கற்றுக்கொள்வோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்;வதிப்பாராக. ஆமென்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

===

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - **Good Tidings Bible-Prints Ministries**

## 'நல்ல விதைகள்' சுவிசேஷ கைப்பிரதிகள்

'GOOD SEEDS' GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். SPONSOR செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

===

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-106 மார்ச் 2026 எப்பிசோடு-106

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**அறிமுகம்:** இஸ்ரவேலின் வரலாற்றில், தேவனுக்கும் மனிதனுக்குமான உறவின் சுருக்க பதிவே இச்சங்கீதம். இறைவனின் முடிவில்லா இரக்கத்தையும், மனிதனின் குறுகிய மாறுபாட்டுணர்வையும் இது ஒப்பிடுகிறது. தேவன் தம் மக்களுக்குச் செய்த அற்புதங்களையும், அவர்கள் செய்த துரோகங்களையும் விவரிக்கும் இப்பாடல், நம் ஆன்மீக வாழ்வுக்கு தேவையான படிப்பினைகளை வழங்குகிறது.

**1. இறைவனின் வல்ல செயல்களும் மனிதனின் துதியும்: (வச.1-2)**

இச்சங்கீதத்தின் ஆரம்பமே ஒரு பெரிய உண்மையை நமக்கு வெளிப்படுத்துகிறது. "ஆண்டவரின் வலிமைமிகு செயல்களை யாரால் இயம்ப இயலும்? அவர்தம் புகழை யாரால் விளம்பக்கூடும்?" (வச.1) என்று சங்கீதக்காரர் கேட்கிறார். இக்கேள்வி மனிதனின் வரையறுக்கப்பட்ட தன்மையை உணர்த்துகிறது. நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் மேலாக இறைவன் செய்ய வல்லவர். சர்வவல்ல தேவனின் மகத்துவத்தை நம்முடைய சிறிய வார்த்தைகளாலும், அற்பமான துதிகளாலும் முழுமையாக வெளிப்படுத்தமுடியாது. கடவுளின் செயல்கள் குறித்து நாம் எவ்வளவு சிந்திக்கிறோமோ, அவ்வளவாய் அவர் நமக்குச் செய்த அற்புதங்களை அறிந்து கொள்ளலாம். நமது பிறப்பு தொடங்கி, தனிப்பட்ட வளர்ச்சி, இரட்சிப்பு, வழிநடத்துதல், குணமாக்குதல், அன்பான நண்பர்கள், குடும்பம் என இப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. கடவுள் இன்றும் பெரிய அற்புதங்களைச் நம் வாழ்வில் செய்கிறார்!

**2. செங்கடலைப் பிளந்த வல்லமை: (வச.7-9)**

"அவர் செங்கடலை அதட்டினார்: அது உலர்ந்துபோயிற்று: பாலை நிலத்தில் நடத்திச்செல்வது போல் அவர்களை நடத்திச்சென்றார் (வச.9)." முன்னால் செங்கடல், பின்னால் எகிப்தின் இரதங்கள் என அவர்கள் சிக்கிக்கொண்டபோது, இறைவன் தலையிட்டு இயற்கையின் நியதிகளுக்கு அப்பாற்பட்டு வழி உண்டாக்கினார். நம் வாழ்விலும் சத்துருவின் சூழ்ச்சிகளும், எதிர்பாராத பிரச்சனைகளும் சூழ்ந்து கொள்ளும்போது, அவற்றை இயேசுவின் நாமத்தில் அதட்டி, பிசாசுக்கு எதிர்த்து நிற்கும் வல்லமை விசுவாசிகளுக்கு உண்டு.

**3. மக்களின் நன்றிமறதி: (வச.13-15)**

"அவர் செய்தவற்றை அவர்கள் விரைவிலேயே மறந்துவிட்டார்கள்.. பாழ்வெளியில் அவர்கள் இறைவனைச் சோதித்தார்கள்" (வச. 13-15).

செங்கடலைக் கடந்த அதே மக்கள், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் எல்லையில் நிற்கும்போது அவநம்பிக்கை கொண்டார்கள். இறைவன் எண்ணற்ற அற்புதங்களைச் செய்தும், அவர்கள் அவருடைய வார்த்தையை நம்பாமல், முறுமுறுத்தார்கள். இது மனித இயல்பின் குருட்டுத்

தன்மையை வெளிப்படுத்துகிறது. மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான தவறுகளைச் செய்து விட்டு புதிய அற்புதங்களை எதிர்பார்க்கும் மனித மனதை இது நமக்கு நினைவூட்டுகிறது.

வனாந்தரத்தில் இஸ்ரவேலர், தாங்கள் விரும்பிய உணவு-தண்ணீரை பெறுவதில் கவனம் செலுத்தினார்கள். நீடித்த ஆன்மீக திருப்தியைக் காட்டிலும் உடனடி உடல் இன்பத்தில் அவர்கள் அதிக அக்கறை காட்டினார்கள். மேலும் கடவுளின் பராமரிப்பு மற்றும் ஒத்தாசையில் நம்பிக்கை வைக்க மறுத்துவிட்டார்கள் (எண். 11:18-33). நாம் விரும்பியதைப் பெறவில்லையென்றால், அது நமது நன்மைக்காக இல்லை என்று கடவுளுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே, அவருடைய பராமரிப்பிலும் ஒத்தாசையிலும் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும்.

**4. சிலை வழிபாடும் இறைவனின் கருணையும்: (வச.34-46)**

“வேற்றினத்தாரோடு கலந்துறவாடி, அவர்களின் வழக்கங்களைக் கற்றுக்கொண்ட னர்... அவர்களின் தெய்வச்சிலைகளைத் தொழுதனர்” (வச. 34-39).

இஸ்ரவேல் கடவுளை விட்டு விலகியது. பெரிய அற்புதங்களைக் கண்டபிறகு, எப்படி அவர்கள் கடவுளைவிட்டு விலகி, சிலைகளை வணங்க முடியும்? நாமும் கடவுளுடைய பெரிய அற்புதங்களைக் கண்டிருக்கிறோம், ஆனாலும், உலகத்தின் சிலைகளான அதிகாரம், பணம், வசதி, புகழ், உடலுறவு மற்றும் இன்பம் ஆகியவற்றால் மயங்குகிறோம். இஸ்ரவேல் கடவுளை மறந்தது போல, நாமும் அவரை மறந்து உலக அழுத்தங்களுக்கு அடிபணிகிறோம். “எனவே, ஆண்டவரின் சினம் அவர்தம் மக்களுக்கெதிராகப் பற்றியெரிந்தது; வேற்றினத்தாரின் கையில் அவர்களை ஒப்படைத்தார். எதிரிகள் அவர்களை ஒடுக்கி, அவர்களைத் தாழ்த்தினர்” (வச.40-42). இஸ்ரவேலருக்கு உதவுவதற்காக கடவுள் அவர்களுக்கு பிரச்சனைகளை அனுமதித்தார். நம் வாழ்வில் நாம் சந்திக்கும் பிரச்சனைகள் நமக்கு உதவிகரமாக இருக்கமுடியும், ஏனெனில் அவை நம்மைத் தாழ்த்த உதவுகின்றன, “அவர்களைச் சிறைசெய்தவர்கள் முன்னிலையில் இரக்கம் பெறும்படி செய்தார்” (வச.46). நம் பாவங்களுக்காகத் தமது குமாரனை மரிக்க அனுப்புவதில் கடவுள் நம்மிடம் இரக்கங்காட்டினார் (ரோம.5:8). நாம் பாவத்திற்குக் அடிமைக ளாக இருந்தபோதே அவர் இதைச் செய்துள்ளதால், நாம் அவர் பிள்ளைகளாயிருக்கையில் நம்மீது இரக்கங்காட்டுவது அதிக நிச்சயம்.

**முடிவுரை:** இச்சங்கீதம் ஒரு வரலாற்றுப் பதிவு மட்டுமல்ல; நம் ஒவ்வொருவரின் ஆத்துமா வையும் படம் பிடித்து காட்டும் ஒரு கண்ணாடி. இறைவன் மன்னிக்கும் சுபாவமுள்ளவர், இரக்கமுள்ளவர்; அவர், தம் அன்பை என்றென்றும் நிலைக்கச்செய்பவர். ஆனால், நாம் நமது மாறுபாட்டுணர்வை உணர்ந்து, அவரிடம் திரும்பவேண்டும். நம் வாழ்வின் செங்கடல்களை அவர் அதட்டி வழியுண்டாக்க, நாம் அவரிடம் வேண்டுதல் செய்யவேண்டும். கடந்தகாலத்தில் அவர் செய்த அற்புதங்களை நினைவுகூர்ந்து, எதிர்காலத்தில் அவர் நம்மைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையுடன் வாழ்வதே இச்சங்கீதம் நமக்குக் கற்றுத்தரும் பாடம்.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

=================================================================================

# வேதாகம போட்டி-184 (பிப்ரவரி போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C. (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அன்னாள் ஜெபக்கனி (கோய)
10) அனி பாய் ஜாண் (திலி)
11) அரோமா சாத்ராக் (திலி)
12) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
13) ஆஷா அனி (சென்)
14) பெல்சி தங்கராஜ் (சென்)
15) பெனிட்டா பிராங்க்ளின் னச. (சென்)
16) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
17) பியூலா ஜாண்ஸன் (ஈரோ)
18) பியூலா ராஜசெல்வன் (கோய)
19) செலினா பென்சி வில்சன் Dr. (குவை)
20) செலினா வின்சென்ட் (திலி)
21) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
22) சந்திரலேகா (ஆபி)
23) சந்திரா சாமுவேல் (திலி)
24) சார்லஸ் ஃபின்னி Dr. (சென்)
25) சார்லஸ் சாலோமோன் யைக (புனே)
26) சார்லட் டேவிட் (சென்)
27) சித்ரா பெஞ்சமின் (திளு)
28) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
29) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
30) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
31) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
32) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
33) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
34) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
35) டெய்ஸி பில்பா (மும்)
36) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
37) டெய்ஸி சாம் (கன்)
38) டேனியல் தாமஸ் (திலி)
39) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
40) தெபோராள் D. (சென்)
41) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
42) தேவநேசம் ராஜாசிங் (சென்)
43) டோராபாய் ஜூலியஸ் (சென்)
44) தீபா மெர்சி கிறிஸ்டோபர் (சென்)
45) தேவகனி எமிலிசன் (சென்)
46) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
47) எபெனேசர் டேனியல் (கத்)
48) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
49) எலிசபெத் செல்லத்துரை (சென்)
50) எஸ்தர் டி.ஆர். (திலி)
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
52) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
53) குளோரி ரவீந்திரன் (திலி)
54) ஞானம் ஜெபராஜ் (திலி)
55) ஞானம் பிலிப் (கோய)
56) ஞான ரோஸ் G. (திளு)
57) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
58) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
59) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
60) கிரேஸ் பிரின்ஸ் (தென்)

61) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
62) கிரேஸியா ஜெயபால் (சென்)
63) கிரிசெல்டா செய்லர் (சென்)
64) ஹெலென் ஜான்சிராணி (திலி)
65) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
66) ஹெலென் I. (திரு)
67) ஹெலன் திலக் (தூத்)
68) ஹேமா அஜீத் (சென்)
69) ஹேமா கேப்ரியேல் (பெங்)
70) ஹெப்சி அசரியா (பாண்)
71) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
72) ஹன்ஸா மங்களராஜ் (சென்)
73) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
74) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
75) ஜமீலா செல்வராஜ் (சென்)
76) ஜமுனா K. (சென்)
77) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
78) ஜேன் தர்மராஜ் (திலி)
79) ஜான்ஸி சந்தியா (திலி)
80) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
81) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
82) ஜெபா கோல்டா (திலி)
83) ஜெபா ஜெயராஜ் (சென்)
84) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
85) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
86) ஜெபசீலி கிளின்டன் (தூத்)
87) ஜெபா ஜோன்ஸ் (கோய)
88) ஜெனிலா S. (சென்)
89) ஜென்ஸி ஞானேஷ் (மும்)
90) ஜெரின் ஸ்டீபன் (மும்)
91) ஜெஸி செல்லதுரை (கோய)
92) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
93) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
94) ஜெயசீலி மார்டின் (தூத்)
95) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
96) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
97) ஜூலியட் ஜெபா (சென்)
98) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
99) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
100) கலா கிருபாகரன் (திலி)
101) கலையரசி செல்வராஜ் (சென்)
102) கஸ்தூரி எலியாஸ் (திலி)
103) கிருபாவதி S. (சென்)
104) கோயில்பிள்ளை ஞானதாய் (தென்)
105) லதா மைகேல்ராஜ் (சென்)
106) லீலா ஜோஸப் (கோய)
107) லில்லி ஜாண்ஸன் (சென்)
108) லிஸி டென்சிங் (திலி)
109) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
110) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
111) மல்லிகா V. (சென்)
112) மரியாள் ஜே.எஸ் (தூத்)
113) மேபா ஞான சுகி (கன்)
114) மேபல் கிறிஸ்டியன் (சென்)
115) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
116) மெர்சி ஃபுளோரா பாஸ்கரன் (வேலூ)
117) மெர்லின் தேவராஜ் (சென்)
118) மெர்லின் சாமுவேல் (சென்)
119) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
120) மில்காள் சாம் (சென்)
121) முத்துமாலினி அலீஸ் (கோய)
122) நதியா லாரன்ஸ் (திரு)
123) நேச மாலா பீட்டர் (திலி)
124) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
125) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
126) ஓலிவியா லேங்டன் (திசி)

127) பாக்யபாய் ஆரோன் (திலி)
128) பமீலா எட்வின் (கன்)
129) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
130) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
131) பொன்மணி உத்தமசிங் (சென்)
132) பிரேமா ஜானி (தென்)
133) பிரேமா ஸ்டாலின் (சென்)
134) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
135) பிரின்ஸ் தயாநிதி (சென்)
136) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
137) ராஜபிரமீளா (திதூ)
138) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
139) ரமோலா அதிசயராஜ் (திலி)
140) ராணி ஃபுளோரா (தென்)
141) ராணி பிரபாகர் (திலி)
142) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
143) ரத்னாவதி பாண்டியன் (சென்)
144) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
145) ரூபவதி நோபிள் (திலி)
146) ரூத் HAPP (திசி)
147) ரூத் ஜாண்ஸன் (திலி)
148) ரூத் நரேஷ் (சென்)
149) சலோமி மனோகர் னச. (சென்)
150) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
151) சாரா பாலசிங் (மது)
152) சரோஜா செல்வராஜ் (சென்)
153) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
154) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
155) செல்வி அமிர்தராஜ் (திளு)
156) செல்வி S. (சென்)
157) செல்வின் S. (தூத்)
158) சாந்தி ஆல்பர்ட் (தென்)
159) சாந்தி ஜெயசீலன் (சென்)
160) சாந்தி ரோஸ் (கோய)
161) ஷர்மீளா செல்வராஜ் (கட)
162) ஷீலா இஸ்ரேல் (திசி)
163) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
164) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
165) சவுந்தரம் சாலமோன் (சென்)
166) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
167) ஸ்டெல்லா சூசைய்யா (தூத்)
168) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
169) சுகிர்தா சின்னதுரை (திலி)
170) சுஜாதா சாமுவேல் (சென்)
171) சுசீலா தியோடர் (திசி)
172) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
173) தனசீலி ஞானராஜ் (சென்)
174) உமா குளோரி (சென்)
175) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
176) வசந்தா அன்பன் (திலி)
177) வசந்தா சந்திரசேகர் (கோய)
178) வசந்தா துரைராஜ் (OFT)(திசி)
179) வசந்தா சேகர் (சென்)
180) வசந்தி கருணாகரன் (சென்)
181) வசந்தி வாசன் (சென்)
182) விஜயராணி A. (சென்)
183) விஜி டேனியல் (செங்)
184) விமலா ஜெயக்குமார் (தூத்)
185) வினோலியா பால் (மது)
186) வைலட் கிறிஸ்டோபர் (திலி)

## வேதாகம போட்டி-184 பிப்ரவரி போட்டிகள் - எஸ்தர் புத்தகம் சரியான விடைகள்

1. உலர் உபவாசம் - இர. பக்கம்.19
2. மடிந்தால் மடிகிறேன்,
   அழிந்தால் அழிகிறேன்,
   மரித்தால் மரிக்கிறேன் - இர. பக்கம்.2
3. மேலதிக விடுதலை - இர. பக்கம்.5
4. யூதர் எஸ்.9:5
5. சிரேஷ் எஸ்.5:10
6. ஆமான் எஸ்.7:8
7. சரி - எஸ். 3:15
8. தவறு - எஸ். 9:14
9. சரி - எஸ். 8:15
10. ஈ - ஸ்திரீகளுக்கு எஸ். 1:9
11. அ - எஸ்தர் எஸ். 9:32
12. ஆ - அரமனை எஸ். 4:2
13. தூக்குமரம் எஸ். 7:9-10
14. மொர்தெகாய் எஸ்.2:7, 19-23
15. சூசான் எஸ். 1:2,3:15,8:15

---

# விடுகதை விவிலியம்

## புத்தகம் வெளியிடப்பட்டது...!

**THE RIDDLE BIBLE - BOOK RELEASED**

**எமது 30வது வெளியீடு விற்பனைக்கு தயார்**




இரட்சிப்பு பத்திரிக்கையில் கடந்த 15 ஆண்டுகளாக 'வேதக்கதை விடு கதை' என்ற பெயரில் வெளியான வேதாகம விடுகதைகள் தொகுக் கப்பட்டு 'விடுகதை விவிலியம்' என்ற பெயரில் புத்தகமாக வெளி யிடப்பட்டது. விற்பனைக்கு தயார் நிலையில் உள்ள இப்புத்தகத்தை வாங்கி, வாசித்துப் பயன்பெற அன்புடன் அழைக்கிறோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

**பின்-குறிப்பு:** விலை ரூ.100 மட்டும் (தபாலில் பெற ரூ.150 மட்டும்) கிடைக்குமிடம்: இரட்சிப்பு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா. எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

# வேதாகம போட்டி-185

## யோபு புத்தகம்

## 3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 2,4,5,6,19)

## 12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

**வேதவசன இருப்பிடம் - இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும். பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-03-2026**

1. '**நீர் எனக்கு உத்தரவு சொல்லும்**' என்பதை
   இணைத் திருமறையிலுள்ள '**சத்திய வேதம்' எவ்வாறு கூறுகிறது**?
2. தெய்வத் திருக்காட்சியில் யோபு கற்றுக்கொண்ட பாடம் என்ன?
3. யோபு, தன் முன்வாழ்வில் பிறந்த 3மகள்களுக்கு இதை தரவில்லை - எதை?
4. 'விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர்' என யோபுவிடம் கூறியது யார்?
5. 'மாட்டைப்போல் புல்லைத் தின்னும்' - அது எது?
6. 'அது நிர்ப்பயமாயிருக்க உண்டுபண்ணப்பட்டது' - அது எது?
7. 'துன்மார்க்கன் ஆபத்துநாளுக்கென்று வைக்கப்படுகிறான்' - **சரியா தவறா?**
8. 'கள்ளருடைய கூடாரங்களில் செல்வமுண்டு' - **சரியா தவறா?**
9. 'தேவன் மகத்துவமற்றவர்; நாம் அவரை அறிய முடியாது' - **சரியா தவறா?**
10. '**இதை**' கண்டுபிடித்தோம் என்று நீங்கள் சொல்லாதபடி பாருங்கள்:
    அ) இரக்கத்தை ஆ) சாபத்தை இ) வழியை ஈ) ஞானத்தை
11. குறுகின '**இவைகளுக்கு**' முடிவுவருகிறது; நான் திரும்பிவராத வழிபோவேன்:
    அ) நாட்கள் ஆ) ஆயுசுகள் இ) வருடங்கள் ஈ) நினைவுகள்
12. உம்முடைய துவக்கம் '**இப்படி**' இருந்தாலும், முடிவு சம்பூரணமாயிருக்கும்:
    அ) குறைவாய்; ஆ) அற்பமாய் இ) சிறிதாய் ஈ) குழப்பமாய்
13. தூஷிக்க தூண்டிநின்ற துணைவி! துணைவனை சாகச்சொன்ன துணைவி!
    பரமனை பழிக்கச்சொன்ன பாதகி! பரிசுத்தனை படியச்சொன்ன பாதகி!
    **இவர் யார்? இவர் இவர்?**
14. ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று படையாய் வந்தனர்!
    ஒட்கங்களை அவர்கள் ஓட்டிக்கொண்டு சென்றனர்!
    வேலைக்காரரை அவர்கள் வெட்டிப்போட்டுவிட்டனர்!
    **அவர்கள் யார்? அவர்கள் யார்?**
15. அணுவைப்போல் ஏறும், அவை என்ன?
    அடைமழையாய் இறங்கும், அவை என்ன?
    மேகத்தில் ஏறும், அவை என்ன? மனிதர்மேல் பொழியும், அவை என்ன?
    **அவை என்ன? அவை என்ன?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

==========================================================================================



**<u>கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்</u>**

<u>ஆசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்</u>

பாகம்-82 மார்ச் 2026 எப்பிசோடு-82

# மூலைக்குத் தலைக்கல்லானவர்

## THE ONE WHO IS THE CHIEF CORNER STONE

## O Kyrios Akrogonios Lithos

### ஓ கீரியோஸ் அக்ரோமோனியோஸ் லீத்தோஸ்

வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அப்.4:11

This is the stone which was set at nought of you builders, which become the head of the corner. Act. 4:11

மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய சிலுவைநாதரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு மார்ச் மாத இரக்கத்தின் நல்வாழ்த்துக்கள்.

**மத்**.16:18**பி** இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை. (எப்படியெனில்)

**அப்**.4:12 இயேசுவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே, அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.

**1பேது**.2:6,7 தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று சொல்லியிருக்கிறது. ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு, அது விலையேறப்பெற்றது.

**சங்**.118:22,23 கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பதற்காகவே, அவர் நம்மை பூமியில் பிழைத்திருக்கச்செய்தார். மற்றவர்களால் ஒடுக்கப்பட்ட நம்மை உயர்த்தி மகிமைப்படும்படிக்கு அவர், அவர் உலகத்தாரால் ஆகாதென்று தள்ளப்பட்டார். கர்த்தரின் வலதுகரம் நம்மீது உயர்ந்திருக்கிறது. வலதுகரம் பராக்கிரமம் செய்யும்.

ஜெபம்: கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நீர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்; உம்மை துதிக்கிறோம். 1பேதுரு 2ம் அதிகாரத்தின் திருவசனங்களை வாசித்து, கீழ்ப்படிந்து, நல்நடக்கையுள்ளவர்களாய் வாழ்ந்து, மேலான அதிகாரமுள்ள ராஜாவின் கட்டளைகளுக்கு கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படிய, நன்மைசெய்ய, பாடுகளை சகிக்க, சகோதரரிடத்தில் அன்புகூற, எல்லோரையும் கனம்பண்ண, உம் அடிச்சுவடுகளைப் பின்பற்ற பரிசுத்த ஆவியானவரே! உம் கரங்களில் எங்களை அர்ப்பணிக் கிறோம். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

==========================================================================

**<u>தேன்-துளி வேத வசனக் கதைகள்</u>**

(கதை-178 மார்ச் 2026)



# மன்னித்தால் மன்னிப்பு
## இல்லாவிட்டால் இல்லை

சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

குஜராத்தில் ரெவிங்டன் என்ற தேவமனிதர் ஒரு கம்பெனியில் மேனேஜராக பணியாற்றினார். ஒரு விசுவாசியாக, அலுவலகம், குடும்பம் மற்றும் சமூகத்தில் கிறிஸ்துவின் முன்மாதிரியில்; சமாதானம் நிறைந்த வாழ்வு வாழ்ந்து வந்தார். நல்ல சம்பளம் கிடைத்ததால் நன்செய்-புன்செய் நிலங்கள், வசதியான வீடு என செல்வந்தராகத் திகழ்ந்தார். ஒருமுறை ரெவிங்டன், வெளிநாட்டில் 3ஆண்டுகள் பணியாற்றும் நிலை ஏற்பட்டது. வெளிநாடு சென்ற சமயம் அண்டை நிலத்துக்காரன், ரெவிங்டனின் நிலத்தில் பலலட்சம் ரூபாய் மதிப்புடைய ஒருபகுதியை ஆக்கிரமித்துக் கொண்டான்.

வெளிநாட்டிலிருந்து திரும்பிய ரெவிங்டன், நிலங்களை சுற்றிப்பார்த்தபோது தன் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டதை அறிந்து மிகுந்த வேதனை அடைந்தார். அண்டை நிலத்துக்காரனிடம் வழக்காடவோ, அவனை மன்னிக்கவோ மனமின்றி கவலையுடன் வாழ்ந்துவந்தார். இந்நிலை யில் ரெவிங்டன் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர், தனது 80வது வயதில் நோயுற்று மரணத்தருவாயில் இருந்தார். மரிக்குமுன் அவருக்கு பரி.நற்கருணை கொடுக்க, சபையின் போதகர் வந்தார். போதகர் நற்கருணை வழங்கியபின் ரெவிங்டன் அவரிடம், "ஐயா! நான் இயேசுவுக்கு பிரியமாக வாழ்ந்தபோதும் எனது நிலத்தை அபகரித்தவனை என்னால் மன்னிக்கவே முடியவில்லை" எனக்கூறி புலம்பினார். அதற்கு போதகர், "ஐயா! இயேசு இதை விரும்பமாட்டார்; நீங்கள் அவனை மன்னித்தால்தான் பரலோகராஜ்யத்திற்கு பூரண சுதந்திர வாளி ஆக முடியும்" எனக் கூறினார். உடன்தானே, ரெவிங்டன் அந்த மனிதனை மன்னித்து அவனோடு ஒப்புரவானார். இதைக்கண்ட அம்மனிதனும் மனந்திரும்பி தன்வாழ்வை இயேசு வுக்கு அர்பணித்து தேவனுடைய பிள்ளையாக மாறினான். சில நாட்களுக்குப்பின் ரெவிங்டன் நற்சாட்சி பெற்றவராய் மரித்து நித்திய வாழ்வுக்குள் பிரவேசித்தார்.

பிரியமானவர்களே! நாமும், எந்த குற்றமும் செய்யாதபட்சத்திலும் ரெவிங்டனைப்போல், பிறர் நமக்கெதிராய் செய்யும் குற்றங்களை மன்னித்து தேவாசீர்வாதம் பெறுவோம்.

வேதம் இவ்விதமாய் சொல்கிறது:

மனுஷருடைய தப்பிதங்களை மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார். மத்-6:15

கிறிஸ்துபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். கொலோ-3:13

கர்த்தர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார். ஏசா-55:7

கர்த்தரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி-9:10

---

**M.AZARIAH GNANADOSS M.A, M.ED**

**EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900**



இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-9 பகுதி-3 எப்பிசோடு-44 மார்ச் 2026

**கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்**

**9.இந்திய கிறிஸ்தவம் (17ம் நூற்றாண்டு):**

**3.ராபர்ட் டி நோபிலி - மதுரை மிஷன்:**

சோதனைகள், சர்ச்சைகள், மாற்றங்கள், எதிர்ப்புகள்

ராபர்ட் டி நோபிலி (1577-1656) ஒரு இத்தாலிய பிரபு, கார்டினலின் மருமகன், ஜேசுயிட் சபைகுரு; இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் கத்தோலிக்க மறைப்பணியை மேற்கொண்டவர். தத்துவ போதக சுவாமிகள் என்றழைக்கப்பட்ட நோபிலி, கி.பி.1606 ஜனவரியில் கோவாவிலிருந்து கொச்சிக்கு குடிபெயர்ந்தார். போர்த்துகீசியர்களின் செயல்பாடுகள், இந்து உயர்சாதியினருக்கு ஆட்சேபனைக்குரியவை ஆயின. போர்த்துகீசியர் தோல் காலணிகளை அணிந்தனர் - இறந்த விலங்கிலிருந்து வரும் எதையும் உயர்சாதி இந்தியர்கள் யாரும் தொடக்கூடாது. போர்த்து கீசியர்; கத்தி மற்றும் முட்கரண்டி கொண்டு சாப்பிட்டார்கள் - இது இந்துக்களுக்;கு அருவருப் பானது. அவர்கள் திராட்சரசம் குடித்தார்கள், இறைச்சி சாப்பிட்டார்கள் எல்லாவற்றையும் விட மோசமாக, மாட்டிறைச்சி சாப்பிட்டார்கள் - இவை அனைத்தும் தடையாக அமையும் என்பது நோபிலிக்கு தெளிவாகியது. கிறிஸ்துவுக்காக பிராமணர்களை வெல்ல விரும்பினார், அவர் களின் பொருட்டு அவர் தன்னால் முடிந்தவரை ஒரு இந்திய துறவிபோல், குறிப்பாக பிராமண வாழ்க்கை முறையையும், உணவு - உடை -பழக்கவழக்கங்களையும் பின்பற்றி மறைப்பணியை செய்தார். ஒரு பிராமணன் போல், கீழ் சாதியினருடன் அனைத்து தொடர்பையும் தவிர்த்தார்;.

தமிழ் மொழி மற்றும் தமிழர் கலாச்சாரத்தில் தன்னை இணைத்துக் கொள்ள மிகுந்த ஈடுபாடு கொண்ட ராபர்ட் டி நோபிலி, பிராமணர்களிடையே கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்கில் சமஸ்கிருதத்தை கற்றுக்கொண்டார். கி.பி.1608ல் சிவதர்மா என்ற ஒரு தெலுங்கு பிராமணர், நோபிலிக்கு சமஸ்கிருதம் கற்பிக்க முன்வந்தார். ராபர்ட் டி நோபிலியின் இந்த முயற்சி சர்ச்சையை ஏற்படுத்தியது; எனினும், பிராமணரிடையே மறைப்பணி செய்ய அது மிக உதவியது. நோபிலி, கத்தோலிக்க மறைபொருள்களை தமிழ் மொழியில் எழுதி வெளியிட்டார். அவர் கி.பி.1606ல் மதுரைக்கு வந்து, மதுரை மிஷனின் ஒரு அங்கமாக பணியாற்றத் தொடங்கினார். மதுரை மிஷன், ஜேசுயிட் அருட்பணி வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளது. கல்விப்பணி, சமூகப்பணி அருட்பணி ஆகியவற்றில் மதுரை மிஷனோடு இணைந்த இவரது முயற்சிகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

**மதுரை மிஷன்:**

17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் தென்கிழக்கில் - கோரமண்டல் கடற்கரையைச் சுற்றி நிறுவப்பட்ட புகழ் பெற்ற ஒரு மிஷன், ஜேசுயிட் மிஷன் ஆகும். இந்த மிஷனின் அருட்பணித் தளங்களில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் ராபர்ட் டி நோபிலி மற்றும் ஜான் டி பிரிட்டோ ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர். மிஷனரியான ஜான் டி பிரிட்டோ, மதுரை மிஷனின் சுப்பீரியராக நியமிக்கப்பட்டு, அதன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தார். இந்த மிஷனின் வளர்ச்சியை பெஸ்கி முனிவர் மேலும் ஊக்குவித்தார்.

மதுரை மிஷன், பிராமணர்களிடையே மதமாற்றங்களை எளிதாக்க, 'இணக்க முறை'யை அனுமதித்தது. அதாவது மதமாறிய பிராமணர் பூநூல் அணியலாம், குடுமி வைத்துக் கொள்ள லாம், பிராமணச் சங்குகளை அனுசரிக்கலாம் என்பதே அந்த அணுகுமுறை. நோபிலியின் இந்த அணுகுமுறை மற்ற மிஷனரிகளின் எதிர்ப்பைப் பெற்றது. மேலும் இந்த 'இணக்க அணுகுமுறை' பல சர்ச்சைகளையும் மோதல்களையும் உருவாக்கியது.

குறிப்பாக, கோவாவின் அப்போதைய ஆயரான கிறிஸ்தவோ என்பவர், நோபிலியின் இந்த அணுகுமுறையை விமர்சித்தார். போர்த்துகீசிய ஜேசுயிட்டான கோன்சலோ டிரான்கோசோ என்பவர், கிறிஸ்தவ வளர்ச்சிக்கு ஆபத்தான பேகன் நடைமுறையாகக் கருதி, அதைக் கடுமையாக எதிர்த்தார். இந்து பழக்க வழக்கங்களை எந்த அளவிற்கு கிறிஸ்தவத்திற்குள் ஏற்றுக்கொள்ளமுடியும் என்பதில் நிலவிய கருத்துவேறுபாடு, ஒரு மோதல் மையமாகி, சர்ச்சையாகி, திருச்சபைக்குள் குழப்பங்களுக்கு வழிவகுத்தது. கி.பி.1610, கி.பி.1617, கி.பி.1618 ஆகிய ஆண்டுகளில் இதுகுறித்த விசாரணைகள் திருச்சபையில் நடந்தன.

கி.பி.1609ல் ஈஸ்டர் சமயம், நோபிலி 8 உயர்சாதியினருக்கு ஞானஸ்நானம் அளித்தார். இந்த மதமாற்ற ஞானஸ்நானத்தின் எண்ணிக்கை பின்னர் 50 ஆகியது; சில நாட்களில், மேலும் 12 மதமாற்ற ஞானஸ்நானம் செய்வதாக மாகாண தலைமைக்கு நோபிலி கடிதம் எழுதினார். அதில் முக்கியமான நபர் நோபிலியின் அன்பான சமஸ்திருத ஆசிரியர் சிவதர்மா ஆவார்.

புகார்கள், விசாரணைகள் மற்றும் விவாதங்களுக்குப்பின, தனது அணுகுமுறையை செயல்படுத்துவதில் நோபிலி வெற்றி பெற்றார். திருச்சபையும், பிராமணர்களை மதம் மாற்று வதற்கான 'இணக்க-முறை'யை அனுமதித்தது. முறையான அனுமதி இருந்தபோதிலும், மதுரை மிஷனின் 'இணக்க-முறை'யை சுற்றியுள்ள விவாதம் தொடர்ந்தது. கலாச்சாரத்தழுவல் மற்றும் மதமாற்றப் பிரச்சினைகளை இந்த மிஷன் தொடர்ந்து சந்தித்து வந்தது. இது, இந்திய ஜேசுயிட் மிஷனின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நீண்டகால வழக்கு-விவாதமாகவும், பின்னர் ஆய்வாக வும் மாறியது. மட்டுமல்ல, இது பிற்கால மஷனரி-உத்திகளை மிகவும் பாதித்தது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD), (POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==============================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் மார்ச் 2026

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**

நாள்: 13-03-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**

நாள்: 20-03-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**

நாள்: 27-03-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி "தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க" ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================================

## DETAILS ABOUT US

**CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com

**BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

==========================================================================================

வசன தியானம்-167



## தெய்வத் திருக்காட்சி

# மனந்திரும்பிய யோபு மறுவாழ்வு பெற்ற அதிசயம்

நான் என்னை அருவெறுத்து,
தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்.
யோபு. 42:6

யோபுவின் நண்பர்கள், யோபு மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பினர், ஆனால் துணிகர பாவம் செய்யாததால் அவர் அதற்கு மறுத்துவிட்டார். ஆனால் ஆனால், கடவுளை சந்தித்த யோபு (யோபு.38:1, 42:5) இப்போது, தானாக முன்வந்து மனந்திரும்புகிறார். தாம் துன்பத்தினூடே கடந்து சென்ற நாட்களில் தன்னுடைய நாவினால் செய்த பாவங்களுக்காகவும் மனஸ்தாபப்படுகிறார்.

**எவ்வெவற்றுக்காக யோபு மனந்திரும்பினார்?**

கடவுளிடமிருந்து பதில்களையும் விளக்கங்களையும் கோரிய ஆணவத்திற்காக யோபு மனந்திரும்புகிறார். கடவுளின் நீதியை எதிர்த்து சவால் விட்டதற்காக அவர் மனந்திரும்புகிறார். தன்னை நியாயப்படுத்தும்படி கடவுளை இழிவுபடுத்தியதற்காக மனந்திரும்புகிறார். இறுதியாக, கடவுளை நன்கு அறிந்து கொள்ளாமல் போன பாவத்துக்காக அவர் மனந்திரும்புகிறார். கடவுளைப் பற்றிய யோபின் பேச்சுகள் அறியாமையால் செய்யப்பட்டவையே. யோபு கடவுளின் இறையாண்மையை பாராட்டுவதில் குறைவுபட்டார்.

**தெய்வ-திருச்காட்சியில் யோபு கற்றுக்கொண்ட பாடம்:**

தெய்வத் திருக்காட்சியில் (கடவுளுடனான சந்திப்பில்), யோபு கற்றுக்கொண்ட பாடம் **மனத்தாழ்மை** (யோபு.42:6) ஆகும். யோபு கடவுளை சந்தித்தபின் எந்த காரியத்தைக் குறித்தும் இது ஏன்? இது எதற்காக? என்று கேட்கவில்லை மாறாக தன்னை தாழ்த்துகிறார். கான்ஸ்டபிள் என்ற இறையியல் அறிஞர் கூறுவது போல், நாம் கடவுளை அறிந்திருந்தால் நமது பாடுகளைக் குறித்து, இது ஏன்? எதற்காக? என்று கேட்கவே மாட்டோம். மாறாக உபவாசத்திலும், ஜெபத்திலும் நம்மை தாழ்த்திக்கொள்ளத் தொடங்குவோம். மட்டுமல்ல, துன்பங்களின் மர்மத்தை நாம் மனதார ஏற்றுக்கொள்வோம்.

பெற்றோரின் முடிவுகளை புரிந்து கொள்ளாத குழந்தைகளைப் போல நாம் கடவுளை புரிந்து கொள்ளாதிருக்கலாம்; ஆனால், குழந்தைகள் பெற்றோரை முழுமையாக நம்புவதைப்போல், கடவுள் மீது, மனத்தாழ்மையுடன்கூடிய நம்பிக்கையை வைக்க அழைக்கப்படுகிறோம். கடவுளை சந்திக்க, அவரை அறிந்து கொள்ள வாஞ்சிப்போம்; கடவுள் முன், நம்மைநாமே தாழ்த்தி அர்ப்பணிப்போம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# செய்தித்துளிகள் மார்ச் 2026

1. அமெரிக்க அதிபர் ட்ரம்பின் வர்த்தகக் கொள்கைகள் மீது பெரும்பான்மையான அமெரிக்க மக்கள் (60 சதவீதம்), அதிருப்தி தெரிவித்துள்ளதாக வாஷிங்டன் போஸ்ட் மற்றும் ஏபிசி நியூஸ் இணைந்து நடத்திய ஆய்வில் தகவல்.
2. தமிழ்நாடு, கேரளா உட்பட 12 மாநிலங்களில் எஸ்ஐஆர் பணி நடைபெற்றுவரும் நிலையில், வரும் ஏப்ரல் 2026 முதல் ஆந்திரா, கர்நாடகா உட்பட 22 மாநிலங்களில் எஸ்ஐஆர் பணி நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு.
3. தமிழ்நாட்டில் எஸ்ஐஆர் பணி நிறைவடைந்து, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு. அதன்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். எஸ்ஐஆர் மூலம் 74.07 லட்சம் பேர் பட்டியலிலிருந்து நீக்கம்.
4. தேசிய நெடுஞ்சாலை-சுங்கச்சாவடிகளில் ரொக்கப்பணம் செலுத்தும் முறையை ரத்து செய்ய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முடிவு. வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல், டிஜிடல் பரிவர்த்தனை மாத்திரமே செய்யப்படும் என அறிவிப்பு.
5. தமிழ்நாடு கோல்ப் பிரீமியர் லீக் சாம்பியன்ஷிப், இம்மாதம் 25ம் தேதிவரை, சென்னை-நந்தனம் காஸ்மோபாலிட்டன் கோல்ப் மைதானத்தில் நடைபெறுகிறது. இதில் 12 அணிகள் பங்கேற்பதாக தமிழ்நாடு கோல்ப் கூட்டமைப்பு அறிவிப்பு.

==========================================================================================

# தபசு காலம் 2026
# நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் அனைத்து திருச்சபை இறை மக்கள், ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தபசு காலம் 2026 நல்வாழ்த்துக்கள்.




இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்